எம்.சி.ஓ.பி எண்: 7398/2018 தேதி: 18.04.2026

எ.மசா. : 1

பெயர் : கரண்

த/பெ. : தங்கப்பாண்டியன்

வயது : 24

**சத்திய பிரமாணம் செய்விக்கப்படுகிறார்**

**முதல் விசாரணை**

நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். மேலும் என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் எ.மசாஆ 1 முதல் 4 வரை தாக்கல் செய்கிறேன்.

**மனுதாரா் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் 2ம் எதிர்மனுதாரர் கம்பெனியில் இரண்டு மாதங்கள் பணிபுரிந்து வருகிறேன். விபத்து நடந்த தேதி 07.02.2017.விபத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன். மனுதாரர்கள் இந்த வழக்கில் சம்பந்தம் இல்லை என்று சொல்லியுள்ள விவரங்களுக்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் குற்ற இறுதி தாக்கல் செய்துள்ளேன்.விபத்து சமயத்தில் காப்பீடு நிலுவையில் இருந்தது என்றால் இருந்தது. ஆனால் நிபந்தனைக்கு உட்பட்டு பாலிசி நிலுவையில் இருந்தது. இந்த வழக்கு தாக்கல் செய்தபோது நான் பணியில் இல்லை. மனுதாரர்கள் இழப்பீடு கோருவது சம்பந்தமாக அனைத்து ஆவணங்களும் தாக்கல் செய்துள்ளார்கள் என்றாலும் அதனால் 1,2 எதிர்மனுதாரர்கள் இழப்பீடு செலுத்தவேண்டும் என்றால் சரியல்ல. இறந்தவர் சாலை விபத்தில் ஏற்பட்ட காயத்தினால் இறந்துள்ளார் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் பாலிசி நிலுவையில் உள்ளதால் நாங்கள்தான் இழப்பீடு தரவேண்டும் எ்னறால் சரியல்ல. பாலிசி விதிமீறல்கள் உள்ளது. அதனால் எங்கள் நிறுவனம் இழப்பீடு கொடுக்க வேண்டியது இல்லை என்றால் சரியல்ல.

X

**மறுவிசாரணை இல்லை**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.